# பெரம்பலூர் நகராட்சி

**2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் – 29 ம் நாள் புதன்கிழமை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : நகர் மன்ற தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| **29.11.2023** | **பொருள் எண்: 1.** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 9514/2023/SBM 2.0 நாள். 04.09.2023- ம் தேதிய கடிதத்தில் SBM (U) 2.0 திடக்கழிவு மேலாண்மையில் Swachhata Pakhwada என்ற தலைப்பில் 15.09.2023 முதல் 02.10.2023 வரை Indian Cleanliness Competition 2.0, Indian Swachhata League 2.0 (ISL), Safai mitra Suraksha Shivir, swachh Bharat samaraah என்ற தலைப்புகளின் கீழ் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தவும், நிகழ்ச்சிகளை நேரலையில் சமூக ஊடகங்களில் ஒளிப்பரப்புதல், நீர்நிலைகள் சுத்தம் செய்தல், பள்ளி மாணவ மாணவியர்களை கொண்டு MCC, OCC & உரக்கிடங்கு பகுதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துதல் மற்றும் சைக்கிள் பேரணி நடத்துதல் , தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தலைநகர் டெல்லியில் மாண்புமிகு இந்திய குடியரசு தலைவர் அவர்களின் தலைமையில் நடைப்பெறும் Swachh Bharath கண்காட்சி & ISL 2.0 விழா (ஜாங்கி) நடைபெறும் நிகழ்ச்சியிணை நேரலையாக தூய்மை பணியாளர்களுக்கு காண்பித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஊக்குவித்தல் போன்றவை நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட 15.09.2023 முதல் 02.10.2023 வரை Swachhata Pakhwada என்ற தலைப்பின் கீழ் தினசரி நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு தேவையான ஸ்டிக்கர், பேனர்கள், Swachhata Pakhwada 2.0 என்ற தலைப்பில் விழிப்புணர்வு டிசர்ட், பள்ளி மாணவ,மாணவியர்கள், தன்னார்வலர்கள் கொண்டு நடைப்பெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தினை புகைப்படம் எடுத்தல், வீடியோ எடுத்தல், மாஸ்க், கையுறைகள்,நேரலை நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரலுக்கு அவசர அவசியம் கருதி உள்ளுர் விலைப் புள்ளி பெற்று தேவையான இதரப்பொருள்கள் வாங்கிக் கொள்ளவும்,அதற்க்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1,30,000/- வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதிப்பெற்று உள்ளுர் விலைப் புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 6275 /2023/ எச்1** | தீர்மான எண். **545** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | **பொருள் எண்: 2.** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17380/2022/SBM 2.0 நாள். 07.09.2023-ல் திடக்கழிவு மேலாண்மை திட்டம் SBM (U) 2.0 ல் கழிவுநீர் அகற்றும் வாகனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உயிர் இழப்பு ஏற்படாதவகையில்,அனுமதிக்கபட்டநேரத்தில்பாதுகாப்பானமுறையில்அகற்றவும்,பாதாள சாக்கடை மற்றும் கழிவுநீர் தொட்டிகளிலிருந்து கழிவுநீர்அகற்றும் முன்பும் (24X7) பின்பும் இலவச சேவை தொலைபேசி எண் 14420 தொடர்பு கொண்டு கழிவுநீர் அகற்றப்படும் இடத்தினை தெரிவிக்கவும், கழிவுநீர் தொட்டிகள் மற்றும் பாதாளசாக்கடை சம்பந்தமான அனைத்து புகார்களையும், பொதுமக்கள் புகார் அளிக்க தமிழக அரசின் (24 X 7) இலவச சேவை தொலைப்பேசி எண் 14420 வழியாக பயன்படுத்தவும், பாதாள சாக்கடை சம்மந்தமான புகார்கள் மற்றும் கழிவுநீர் தொட்டிகளிலிருந்து கழிவுநீர் அகற்றுதல் மற்றும் பொது வெளியில் கழிவு நீர் விடுதல் புகார்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஸ்டிக்கர் மற்றும் விழிப்புணர்வு விளம்பர பேனர் பொது இடங்களில் வைக்கவும், நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களில் விழிப்புணர்வு பேனர் வைத்து பொதுமக்களுக்கு ஒலிப்பெருக்கி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பாதுகாப்பான முறையில் கழிவுநீர் அகற்றுவது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட பள்ளி மாணவ மாணவியர்கள், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள்கொண்டு ஊர்வலம் நடத்தவும், அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப் புள்ளி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு தேவையான பொருள்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.60,000/- வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதிபெற்று உள்ளூர் விலைப் புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 6275 /2023/ எச்1** | தீர்மான எண். 546 அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2023 | **பொருள் எண்: 3** இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவுபணி மேற்பார்வையாளர்கள் தூய்மை பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், மற்றும் பொது பிரிவு அலுவலக உதவியாளருக்கு 2023 -2024-ம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்கவும், சீருடைகள் தைப்பதற்கு தையற்கூலியும், வழங்க வேண்டியுள்ளது. துப்பரவு ஆய்வாளர்களின் குறிப்பில் சீருடைகள் வாங்கி வழங்கிட கோரி தெரிவித்துள்ளார்கள் எனவே அரசு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ், பெரம்பலூர் நிறுவனத்தில் வாங்குவதற்கும், மேற்படி சீருடைகள், காலணிகள் மற்றும் தையற்கூலி வழங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,25,000/. இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>பொது சுகாதார பிரிவில் சீருடை அணியும் பணியாளர்களுக்கு 2023 -2024-ம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்குவதற்கு மன்ற கூட்டத்தை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 5229/2010 /H1** | தீர்மான எண். 547 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.11.2023 | **பொருள் எண்: 4.** இந்நகராட்சி பெரம்பலூர் மாவட்ட தலைநகரில் அமைந்துள்ள 20.59 ச.கி.மீ பரப்பளவுள்ள 21 வார்டு பகுதிகளைக்கொண்ட தேர்வுநிலை நகராட்சியாகும். மேலும் மாவட்ட திட்ட பணிகள் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் ஆய்வு பணிக்கு அவ்வப்போது வந்து செல்லும் வண்ணம் உள்ளனர். இது தவிர மாவட்டத்திற்கு வருகை தரும் அமைச்சர்கள் மற்றும் துறை தலைமை உயர்மட்ட அதிகாரிகள் அவர்களின் தலைமையில் நடைபெறும் சிறப்பு அமலாக்கத் திட்ட பணிகள், அரசு விழாக்கள், பண்டிகைகால திருவிழாக்கள் மற்றும் தமிழக அரசின் பொதுசுகாதார சீரிய திட்டமான சிறப்பு ஒட்டுமொத்த தூய்மைப்பணி மாதாந்திர 2-ம் &4-ம் சனிக்கிழமைகளில் நடைபெறும் சிறப்பு கூட்டு துப்புரவு பணிகள், பொதுமக்களின் கவனத்தினை ஈர்க்கும் வகையில் பொதுசுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வு பேரணிகள் மற்றும் பிற அரசுதுறையினரால் நடத்தப்படும் அரசுநிகழ்ச்சிகள் விழாக்கள் மற்றும் மத்திய, மாநில அரசினால் அவ்வப்போது அறிவுறுத்தப்படும் மற்றும் பிற அரசு துறையினர் மூலம் நகர் பகுதியில் சிறப்பு கூட்டு துப்புரவு பணிகள் இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு தூய்மை பணியாளர்களுடன் இணைந்து நடைபெற்று வருகிறது. | தீர்மான எண். 548 அனுமதிக்கப்பட்டது |

மேலும், தற்பொழுது இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 – வார்டு பகுதிகளிலும் பொது சுகாதார பணிகளான முதல்நிலை, இரண்டாம் நிலை கழிவு சேகரிப்பு பணியினை அரசாணை எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.08.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 35295/2022/EA2-SWM-15, நாள்.10.01.2023-ன்படி நகராட்சியின் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் கடந்த 15.05.2023 முதல் செயல்முறைபடுத்தப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில் நகராட்சியின் 24-நிரந்தர தூய்மை பணியாளர்களைக்கொண்டு இந்நகராட்சியின் புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், தினசரி காய்கறி மார்க்கெட் கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணி மேலும் MCC-01, MCC-02, OCC-03, MRF, RRC மற்றும் உரக்கிடங்கு பகுதிகளில் தூய்மைப்பணிகள் மற்றும் உரமாக்குதல் பணி, மறு சுழற்சிக்கு பயன்படாத நெகிழி கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு இறுதியாக்கம் செய்யும் பணிகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் மற்றும் 21 வார்டு பகுதிகளிலும் செயல்பட்டு வரும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்திவரும் 28 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 5 பொது கழிப்பிடங்கள் பராமரிக்கும் பணி, புதிய பேருந்துநிலையத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு செயல்பட்டு வரும் 04 இலவச சிறுநீர் பிறைகள் (Urinal Point) ஆண்-02, பெண்-02 முதலியன பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

மேலும் பெய்துவரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காகவும், பொதுசுகாதார பணிகள் மேற்கொள்வதற்கும், பொது சுகாதார தளவாட சாமான்கள் தேவையாக உள்ளது.

**அவையாவன:-**

| வ.எண் | பொருள் விபரம் | எண்ணிச் கிலே |
|---|---|---|
| 01 | நீர்த்த சுண்ணாம்பு தூள் | 4000 KG |
| 02 | மரம் அறுக்கும் பவர்ஷா இயந்திரம் | 2 Nos |
| 03 | பிளிச்சிங் பவுடர் | 2000 KG |
| 04 | லெமன் கிராஸ் ஆயில் | 100 Lit |
| 05 | பினாயில் | 500 Lit |
| 06 | லைசால் | 100 Lit |
| 07 | மாஸ்க் | 1000 Nos |
| 08 | கையுறைகள் (துணியால் ஆனது) | 1000 Nos |
| 09 | கையுறைகள் (ரப்பரால் ஆனது) | 50 Nos |
| 10 | டாய்லெட் கிளினிங் ஆசிட் | 300 Lit |

| | | |
|---|---|---|
| 11 | டாய்லெட் கிளினிங் பிரஷ் | 50 Nos |
| 12 | சோப்பு ஆயில் | 300 Lit |
| 13 | பிளாஸ்டிக் வாளி (பெரியது) கழிவறை பயன்பாட்டிற்கு | 20 Nos |
| 14 | பிளாஸ்டிக் வாளி (சிறியது) கழிவறை பயன்பாட்டிற்கு | 50 Nos |
| 15 | மக்கு (கழிவறை பயன்பாட்டிற்கான கப்) | 50 Nos |
| 16 | மூடியுடன் கூடிய டஸ்ட் பின் (மகளிர் கழிவறைக்கு) | 30 Nos |
| 17 | மண்வெட்டி | 10 Nos |
| 18 | கடப்பாறை (பெரியது) 5 அடி Tata | 4 Nos |
| 19 | கடப்பாறை (சிறியது) 4 அடி Tata | 4 Nos |
| 20 | ரோடு மணல் தள்ளும் கைபிடியுடன் கூடிய நார் பிரஷ் | 10 Nos |
| 21 | சாக்கடை கரண்டி (கைபிடியுடன்) | 25 Nos |
| 22 | மிளார் துடைப்பம் குச்சியுடன் | 40 Nos |
| 23 | தென்னை துடைப்பம் | 100 Nos |
| 24 | ரெயில்வே சவுல் | 8 Nos |
| 25 | குப்பை தகடு (கைஓடு) | 60 Nos |
| 26 | அரிவாள் | 5 Nos |
| 27 | சம்மட்டி | 2 Nos |
| 28 | சுத்தியல் ( 1 கிலோ எடையுள்ள) | 2 Nos |
| 29 | பூ வாளி (MCC பயன்பாட்டிற்கு) | 2 Nos |
| 30 | நகராட்சி அலுவலக பயன்பாட்டிக்கு மாஃப்பு (தரை துடைப்பான்) | 5 Nos |
| 31 | நகராட்சி அலுவலக, சமுதாய கூடப்பயன்பாட்டிற்கு, ஒட்டடை அடிக்கும் குச்சி | 5 Nos |
| 32 | நகராட்சி அலுவலக பயன்பாட்டிக்கு (பூந்துடைப்பான்) | 5 Nos |
| 33 | களைவெட்டி | 6 Nos |
| 34 | செடி வெட்டும் கத்தரிக்கோல் | 1 Nos |
| 35 | சாக்கடை அள்ளும் பெரிய முள் கொக்கி | 4 Nos |
| 36 | சாக்கடை அள்ளும் சிறிய முள் கொக்கி | 4 Nos |

மேற்கண்ட தளவாட சாமான்கள் பொதுசுகாதார பணி நலன் கருதியும், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,00,000/. ரூபாய் ஏழு இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 7355 /2023/ எச்1**

<table>
<tr>
<td>29.11.2023</td>
<td>

**பொருள் எண்: 5.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பொதுமக்களிடையே டெங்கு காய்ச்சல் மற்றும் பிற காய்ச்சல்களை பரப்பும் முதிர் கொசுக்களை அழிக்கும் பணிக்கு தற்பொழுது- 1,பெரிய மெஹா புகை மருந்து இயந்திரம் மற்றும் -1, சிறிய Pulse புகைமருந்து இயந்திரம் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது.

தற்சமயம் வடகிழக்கு பருவமழை காலம் தொடங்க உள்ளதால் இந்நகராட்சி பகுதியில் பொது மக்களிடையே டெங்கு காய்ச்சல் பரவி வருகிறது. மேலும் இந்நகராட்சியானது பெரம்பலூர் மாவட்ட தலைநகரில் அமைந்துள்ள 20.59 ச.கி.மீ பரப்பளவுள்ள 21 வார்டு பகுதிகளை கொண்ட தேர்வுநிலை நகராட்சியாகும். மேலும் தற்போதைய சூழலில் முதிர்கொசு ஒழிப்பு பணிக்கு தற்சமயம் பயன்பாட்டில் உள்ள புகை இயந்திரங்கள் போதிய அளவில் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, டெங்கு பரவல் தடுப்பு பணியினை தங்கு தடையின்றி மேற்கொள்ளவும், பொதுசுகாதார பணியின் நலன் கருதியும், இப்பணிக்கு தேவையான கீழ்கண்ட புகை மருந்து பரப்பும் இயந்திரங்களை வாங்கி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ.எண் | இனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெரிய மெகா புகை மருந்து பரப்பும் இயந்திரம் (Mega Fogging Machine) | 1 |
| 2 | சிறிய ரக புகை மருந்து இயந்திரம் (Pulse Fogging Machine) | 4 |
| 3 | சிறிய ரக கையடக்க கேஸ் உட்புற புகை மருந்து இயந்திரம் | 4 |

மேற்கண்ட புகை மருந்து இயந்திரங்களை வாங்குவதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.10,00,000/. (பத்து இலட்சம் ) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 7353/2023/ எச்1**

</td>
<td>தீர்மான எண். 549 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.11.2023</td>
<td>

**பொருள் எண்: 6.** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் 24 தூய்மைப்பணியாளர் 7 துப்புரவு பணி மேற்பார்வையாளர் மற்றும் 1 துப்புரவு ஆய்வர்களுக்கு தேவையான பணியின்போது பயன்படுத்தக்கூடிய 32 நபர்களுக்கு உபகரணங்கள் வாங்கி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பாதுகாப்பு உபகரணங்கள் விபரம்**

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தலைகவசம் (Helmet) | 32 Nos |
| 2 | பிரதிபலிக்கும் சட்டை ( Reflecting Jacket) | 32 Nos |
| 3 | மழை கோட்டு (Rain Coat) | 32 Nos |
| 4 | கையுறை இரப்பரால் ஆனது (Hand Gloves) | 32 ஜோடி |
| 5 | கம்பூட்ஸ் | 32 ஜோடி |
| 6 | ஏர் பில்டர் மாஸ்க் | 32 ஜோடி |

</td>
<td>தீர்மான எண். 550 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்காணும் பாதுகாப்பு உபகரணங்களை தூய்மை பணி, நுண்ணுரக்கூட மையப்பணி மற்றும் புயல், மழைவெள்ள, பேரிடர் காலங்களில் பணியாளர்கள் பயன்படுத்திக்கொள்ளவும், பொதுசுகாதார பணியாளர்களின் உடல் நலன் கருதியும் வாங்கி வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் இதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 2,00,000/. ஆகும் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 7354/2023/ எச்1** | |
| **29.11.2023** | **பொருள் எண்: 7.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் தினசரி சேகரிக்கப்படும் மறுசுழற்சிக்கு பயன்பாடாத நெகிழி கழிவுகள் கடந்த மூன்று ஆண்டுகளாக MCC1, MCC2 மற்றும் நெடுவாசல் பகுதியில் அமைந்துள்ள UGSS வளாக பகுதியிலும் சுமார் 1000 டன் அளவில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. 08.09.2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் பெரம்பலூர் நகராட்சியில் தேக்கமடைந்துள்ள நெகிழி கழிவுகள் தீ விபத்து மற்றும் அசாம்பாவிதம் ஏற்படும் முன் போர்கால அடிப்படையில் தனியார் ஒப்பந்த வாகனம் மூலம் அகற்றிட தெரிவிக்கப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 09.09.2023 நேரடி ஆய்விலும் நெகிழி கழிவுகள் உடனடியாக அகற்ற தெரிவிக்கப்பட்டது. நகராட்சி பொது சுகாதார வாகனங்கள் திடக்கழிவு மேலாண்மை வெளிக்கொணர்வு பணிக்கு பயன்பட்டு வருவதாலும், மேலும் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களில் மூன்று டன் வரை மட்டுமே நெகிழி கழிவுகளை ஏற்றி அனுப்ப முடிகிறது. எனவே அதிக அளவில் மறு சுழற்ச்சிக்கு பயன்பாடாத நெகிழி கழிவுகள் உள்ளதால் பெரிய கனரக வாகனம் ஒன்றின் நெகிழி கழிவுகள் ஏழு டன் வரை அனுப்ப முடியும் என்பதாலும் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும், பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும் தினசரி வாடகைக்கு உள்ளூர் விலைப்புள்ளிப் பெற்று இரண்டு பெரிய கனரக வாகனம் மற்றும் ஒரு JCB இயந்திரம் வாகனம் மூலம் மறு சுழற்ச்சிக்கு பயயனபாடாத நெகிழி கழிவுகளை இறுதியாக்கும் செய்யும் பணிக்கு அரியலூர் அல்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு அனுப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதியும், அதற்க்கான உ.தேச செலவினம் ரூ. 1,90,000/. வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதிப்பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 1093 /2017/ எச்1** | தீர்மான எண். 551 அனுமதிக்கப்பட்டது |

29.11.2023

**பொருள் எண்: 8.** பெரம்பலூர் நகராட்சியிலுள்ள கோட்டம் 1 மற்றும் கோட்டம் 2, நெடுவாசலிலுள்ள குப்பை கிடங்கு ஆகியவற்றிலுள்ள மறுசுழற்சிக்கு பயன்படாத நெகிழி கழிவுகளை இறுதியாக்கம் செய்ய கனரக வாகனத்தில் ஏற்றி அரியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு தினசரி கொண்டு செல்ல பெரிய கனரக வாகனம் ஒன்றின் தினசரி வாடகை மற்றும் JCB வாகனத்தின் ஒரு மணி நேரத்திற்கு என்ன வாடகை குறித்து 26.09.2023 அன்று மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு கீழ்காணும் மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | bghUŸ | நிறுவனம் / ஒப்பந்ததாரர் பெயர் விலைப்புள்ளி விபரம் | | |
|---|---|---|---|---|
| | | G.கண்ணன் ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | ராஜா ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | |
| 1 | JCB இயந்திரம் ஒரு மணி நேரம் இயங்குவதற்கு டீசல், டிரைவர் படி, ஆயில் உள்பட | ரூ.1000/. | ரூ.1050/. | |
| 2 | பெரிய கனரக வாகனம் ஒரு நாளைக்கு டீசல், டிரைவர் படி, | ரூ.9500/- | ரூ 9600/-. | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.G. கண்ணன் என்பவர், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1093/2017/எச்1**

தீர்மான எண். 552
அனுமதிக்கப்பட்டுத

29.11.2023

**பொருள் எண்: 9.** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி குறிப்பின் படி உழவர் சந்தை மற்றும் அதனை சுற்றி உள்ள புதர்களையும் செடிக் கொடிகளையும்,பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்க்கும் இடையூராக உள்ள உழவர் சந்தை பகுதியில் ஆக்கிரமிப்பு நடைபாதை கடைகளையும் அகற்றிடவும், ஆதிதிராவிடர் பள்ளி பெண்கள் விடுதி செடிக் கொடிகளை அகற்றிடவும், JCB & டோசர் இயந்திரம் மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/. யை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதிப்பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2267 /2023/ எச்1**

தீர்மான எண். 553
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 29.11.2023 | **பொருள் எண்: 10.** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.ஜி3/e-1095721/2023 நாள். 25.08.2023-ன் படி பெரம்பலூர் மாவட்டம் 28.08.2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அரசு முன்னேற்றம் குறித்த ஆய்வு, முன்னேற்றபணிகள், திட்டப்பணிகள், மேற்கொள்ள சுற்றறிக்கையில் நகராட்சிகென வ.எண். 10-ல் பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சியரக அலுவலக உள்வளாகம், மற்றும் வெளிப்புற வளாகத்திலுள்ள செடி, கொடிகளை தேவையற்ற குப்பைகை அகற்றி சுத்தமாக பராமரித்தல் மாவட்ட ஆட்சியரக அலுவலக நுழைவுவாயில் (பாலக்கரை) முதல் மாவட்ட ஆட்சியரகம் அலுவலகம் மற்றும் சுற்றுலா மாளிகை வரை சாலை யினை சுத்தமாக பராமரித்தல் பெரம்பலூர் நகரின் முக்கிய சாலைகளை தூய்மையாக பராமரித்தல் பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கொண்ட செடிகள், புதர்கள் மற்றும் புற்கள் மற்றும் செடிகொடிகளை அகற்றிட இரண்டு Bush Cutter இயந்திரம் வாங்கி கொள்ள அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 35,000/-யை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதிப்பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 6046/2023/ எச்1** | தீர்மான எண். 554 அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2023 | **பொருள் எண்: 11.** பெரம்பலூர் நகராட்யில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை அணிந்து பணிபுரிய வேண்டும் என பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை அரசு கடித எண். 20948/அ2/2018-1 நாள். 23.08.2018 - ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி செயல்படவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் பெரம்பலூர் அவர்கள் தற்போது அறிவுரை வழங்கியுள்ளார்கள் எனவே மேற்படி அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு அடையாள அட்டை தயார்செய்ய உத்தேச செலவினம் ரூ.20,000/ க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 7352/2023/ எச்1** | தீர்மான எண். 555 அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2023 | **பொருள் எண்: 12.** மாண்புமிகு தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் 2023- 2024 சட்டசபை அறிவிப்பு எண். 105-ன் படி நடப்போம் நலம் பெறுவோம் (Health Walk) அறிவிப்பினை தொடர்ந்து வருகின்ற 04.11.2023 அன்று சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சென்னையிலிருந்து காணொளி மூலம் தொடங்கி வைக்க உள்ளார்கள்.<br>எனவே, இத்திட்ட செயல்படுத்துதல் குறித்து பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் 31.10.2023 அன்று மாலை 3.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக ஆய்வுக்கூட்ட அரங்கில் நடைபெற்ற (Health Walk) நடைபயிற்சி ஒருங்கிணைப்பு குழு ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடையே தினசரி நடைபயிற்சி பழக்கத்தினை ஊக்கப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டி பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் அருகிலுள்ள சிறுவர் விளையாட்டு பூங்காவில் தொடங்கி மாவட்ட விளையாட்டு அரங்கம், கேந்திரிய வித்தியாலாய பள்ளி – விளாமுத்தூர் சாலை வழியாக மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் இவைகளை கடந்து பாலக்கரை வளைவு வழியாக | தீர்மான எண். 556 அனுமதிக்கப்பட்டது |

திருச்சி தேசிய நெடுஞ்சாலை வளைவு சென்று முகாம் தொடங்கிய சிறுவர் பூங்கா வந்தடைந்து **8.00** கி.மீ தொலைவு வரை நிறைவடையும் வழிதடத்தில் சாலை பகுதியின் இருபக்கமும் **5** அடி அளவில் JCB, டோசர், புல்வெட்டும் இயந்திரங்களை கொண்டு முட்புதர்களையும் செடிகொடிகளையும் அகற்றி **03.11.2023** மாலைக்குள் சுத்தம் செய்து தரவேண்டி நேரடி உத்திரவு பிறப்பித்துள்ளார். மேலும் **04.11.2023** அன்று காலை **6.00** மணியளவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள நடப்போம் நலம் பெறுவோம் (Health Walk) திட்ட வழித்தடங்களை பொதுமக்கள் நடப்பதற்கும் நடைபயிற்சி மேற்கொள்ளவதற்கும் ஏதுவாக போதிய வசதிகளான **2** கி.மீ. இடைவெளி அளவில் நான்கு இடங்களில் குடிநீர் வசதி கழிப்பறை வசதி, பொதுமக்கள் அமர்ந்து செல்வதற்கு போதிய இருக்கை வசதிகள் பெரம்பலூர் நகராட்சி சார்பாக செய்து தருமாறு அறிவுரை வழங்கியுள்ளார்கள்

மேற்படி பணிகளை மேற்கொள்ள தேவையான **1** JCB வாகனம், **1** டோசர் இயந்திரங்களை கொண்டு **01.11.2023** காலை முதல் **03.11.2023** மாலைக்குள் வழிதடபாதைகளில் **5**அடி அளவில் உள்ள மணல் மேடுகளையும் புதர்களையும் அகற்றி சுத்தம் செய்திட வேண்டியுள்ளது. மேலும் **8** கி.மீ நடைபயிற்சி வழித்தடபாதையில் 2கி.மீ இடைவெளியில் 4 இடங்களில் நடைபயிற்சி மேற்கொள்ளும் பொதுமக்கள் அமர்ந்து இளைபாறி செல்லும் வகையில் **4** இடங்களில் **10** பென்ச் இருக்கைகள் மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதியும் ஏற்படுத்தி தர வேண்டியுள்ளது. எனவே மேற்காணும் பணியினை செய்து முடிக்க போதிய காலஅவகாசம் இல்லாத காரணத்தினால் பணியின் அவசர அவசியம் கருதி போர்கால அடிப்படையில் செய்து முடிக்க ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.3,00,000/. மன்றத்தின் அனுமதி கோரலாம்

வரைவு மன்ற பொருள் ஆணையரின் ஒப்புதலுக்கு

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 7359/2023/ எச்1**

---

**29.11.2023**

**பொருள் எண்: 13.** இந்நகராட்சிக்கு 2023-2024 ம் ஆண்டின் 15 வது மத்திய நிதிக்குழு மானியம் திட்டத்தின்கீழ் பேட்டரியால் இயங்கும் வாகனம் வாங்குவதற்கு ஒப்பந்தபுள்ளி விளம்பரம் செய்யப்பட்டது மற்றும் இந்நகராட்சியில் நடைபெறும் திட்டபணிகள் விபரத்தினை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் தொழில் மலரில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளதற்கு விளம்பர கட்டணம் செலுத்த கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே கீழ்காணும் நாளிதழ்களுக்கு விளம்பர கட்டணம் செலுத்தவும் இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் | விளம்பரம் செய்யப்பட்ட விபரம் |
|---|---|---|
| 1 | தினகரன் நாளிதழ் | திட்டப்பணிகள் ஒப்பந்தபுள்ளி விளம்பரம் |
| 2 | தினதந்தி நாளிதழ் | திட்டப்பணிகள் சாதனைகள் |
| 3 | தினமலர் நாளிதழ் | திட்டப்பணிகள் சாதனைகள் |

தீர்மான எண். 557
அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 4 | தினகரன் நாளிதழ் | திட்டப்பணிகள் சாதனைகள் | 24780 |
| | **மொத்தம்** | | **101021** |

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

---

**29.11.2023**

**பொருள் எண்: 14** இந்நகராட்சியின் பொது நிதி 2023-2024 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 10.11.2023 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண். 558 அனுமதிக்கப்பட்டது

| பொது நிதி– 2023-2024 | | | | |
|---|---|---|---|---|
| **4வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ள** |
| 1 | நகராட்சி நிர்வாக மண்டல அலுவலகத்தில் இயங்கி வரும் கணிணி அமைப்புகளுக்கான UPS மற்றும் Battery உபகரணங்கள் விநியோகம் செய்யும் பணி | 1.70 | M/s/ Front line system service ltd, நிறுவனம் சென்னை, (–) 0.33% மதிப்பீட்டிற்கு குறைவு<br>திரு. Riveraa computers ஒப்பந்ததாரர் 1.12% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப் புள்ளி அளித்த Front line system service ltd, நிறுவனம் சென்னை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |

கு.

**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s/ Front line system service ltd, நிறுவனம் சென்னை அவர்களின் (–) 0.33 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 6402/2022/ இ1**

---

**29.11.2023**

**பொருள் எண்: 15** இந்நகராட்சியின் பொது நிதி 2023-2024 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 10.11.2023 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண். 559 அனுமதிக்கப்பட்டது

| பொது நிதி– 2023 -2024 | | | | |
|---|---|---|---|---|
| 4வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (இலட்சம் | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம் | குறைந்த ஒப்பந்த[illegible] விவரம் |
| 1 | இந்நகராட்சியில் பயன்படுத்தப்படும் 23 கணிணிகள் மற்றும் 17 பிரிண்டர்களை ஆண்டு பராமரிப்பு செய்யும் பணி | 2.15 | M/s/ Sumarajit solutions Thanjavur , நிறுவனம் (–) 0.66% மதிப்பீட்டிற்கு குறைவு<br>திரு. NBS computers, Thanjavur , ஒப்பந்ததாரர் 9.71% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த Sumarajit solutions Thanjavur நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம் |

கு.

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s/ Sumarajit solutions Thanjavur நிறுவனம் அவர்களின் (–) 0.66 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.6755/2023/ இ1

---

**29.11.2023**

**பொருள் எண்: 16** இந்நகராட்சியின் 15 வது மத்திய நிதிக்குழு மானியம்- 2023-2024 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 15.11.2023 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண். 560 அனுமதிக்கப்பட்டது

| 15 வது மத்திய நிதிக்குழு மானியம்- **2023-2024** | | | | |
|---|---|---|---|---|
| 4வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளியி[illegible] |
| 1 | பெரம்பலூர் நகராட்சிக்கு பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) 22 எண்ணிக்கையில் விநியோகம் செய்யும் பணி | 43.50 | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. திணேஷ் மல்லையா ஜெயலட்சுமி கோயமுத்தூர், நிறுவனம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0.32 % மதிப்பீட்டிற்கு அதிகம் | | |

| | | |
|---|---|---|
| | கு.<br>**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவர்களின் (–) 0.05 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.<br><br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| **29.11.2023** | **பொருள் எண்: 17** இந்நகராட்சிக்கு அறிவுசார் மையம் கட்டுமானபணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வழங்குவதற்கான தயார்நிலையில் உள்ளது அறிவுசார் மையத்திற்கு தேவையான நூல்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் மாநகராட்சி அறிஞர் அண்ணா கல்யாண மண்டபத்தில் தஞ்சாவூரில் இரண்டாவது கட்டமாக வாங்கி வைக்கப்பட்டுள்ளதை இந்நகராட்சி அலுவலகத்திற்கு எடுத்து வருவதற்கு தனியார் வாகனம் TN 46 Y 4956 வாடகைக்கு பயன்படுத்தப்பட்டு நூல்கள் தஞ்சாவூரிலிருந்து எடுத்து வரப்பட்டது மேற்படி வாகனத்திற்கான வாடகை கட்டணம் ரூ. 6500/- (ரூபாய் ஆறாயிரத்து ஐநூறு மட்டும் ) பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு. ந.கந்தசாமி என்பரால் ரொக்கமாக தொகை வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தொகை ரூ. 6500/-யை திரு. ந.கந்தசாமி வருவாய் ஆய்வாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதிப்பெற்று பணியை செய்து முடித்தமைக்கும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண். 561 அனுமதிக்கப்பட்டது |
| **29.11.2023** | **பொருள் எண்: 18.** இந்நகராட்சியில் குடிநீர் விநியோக பணிக்கு **38** பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி காலம் **30.11.2023** –ல் முடிவடைய உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 15.11.2023–ம் தேதிய காணொலி காட்சி ஆய்வுகூட்ட அறிவுரைகளில் மேற்படி பணிக்கு தேவையான பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணிகள் மேற்கொள்வதற்கான கருத்துருவினை தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்கள்<br>இச்சூழ்நிலைலயில் இந்நகராட்சியில் இப்பணிகளுக்கு தேவையான பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பெறுவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் தற்போது மேற்படி பணியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்கி வரும் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக மேலும் ஆறு மாதங்கள் அல்லது நிர்வாக அனுமதி பெற்று புதிய ஒப்பந்தம் பெறும் நிறுவனத்திடம் ஒப்படைக்கும் நாள்வரை. இந்நிகழ்வில் எது முன்னதாக நிகழ்கிறதோ அதுநாள் வரைக்கும் மேற்படி ஒப்பந்த | தீர்மான எண். 562 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நிறுவனத்தினால் பணியாளர்கள் வழங்கிட விருப்பம் இருப்பின் ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலைவிகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணியாளர்களை வழங்கிட சம்மதக் கடிதத்தினை சமர்ப்பிக்கமாறு தெரிவித்து 15.11.2023–ல் ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது .<br>மேற்படி ஒப்பந்ததாரரின் 17.11.2023–ம் தேதிய கடிதத்தில் மேலும் ஆறு மாதங்களுக்கு பணியாளர்களை வழங்கிடவும் ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கிட சம்மதம் தெரிவித்து ஒப்பந்ததாரர் திருமதி எஸ். ஜெயந்தி என்பவர் கடிதம் சமர்பித்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பணியாளர்களை 01.12.2023 முதல் பெறுவதற்கு அனுமதி மற்றும் இதற்கான தோராய செலவினம் ரூ. **42.00** இலட்சத்திற்கும் இச்செலவினத்தை வருவாய் நிதி அல்லது குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதியும் மேற்படி பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பெற்று ஆறுமாதங்களுக்கு பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| **29.11.2023** | **பொருள் எண்: 19.** பெரம்பலூர் நகராட்சியி;ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து ( CWSS )Â£l¤Â‹ _y« தினசரி **3.20** MLD பெறப்பட்டு , நகரில் உள்ள நீர்த்தேக்க தொட்டிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு அதன் பின் பொதுமக்களுக்கு பகுதி வாரியாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் நீர்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு , விநியோகம் செய்யப்படுவதில் , நீர் நிரம்பும் அளவுகள் மற்றும் பகுதி வாரியாக விநியோகம் செய்யப்படும் அளவுகளை துல்லியமாக கணக்கிட வேண்டியுள்ளது. நீர்தேக்க தொட்டிகளின் அளவுகளை கண்டறிய Scale அளவுமானி பயன்படுத்தபட்டு வருகிறது. அளவுமானிகள் அமைக்கப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையில் இதில் எழுதப்பட்டுள்ள குறியீடுகள் அழிந்த நிலையில் சரிவரதெரியவில்லை. மேலும் இதற்காக பயன்படுத்தப்படும் கயிறுகளால் அடிக்கடி பிரச்சனை ஏற்படுவதால் அளவு மானி இயக்கம் தடைபடுகிறது. இதனால் நீர்த்தேக்க தொட்டிகளில் நிரம்பி வழியும் நீரை அல்லது விநியோகத்தின் தேவைக்கான குடிநீர் இருப்பு அளவுகள் கண்கானிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. இந்த தருணங்களில் பணியாளர்கள் உயர்மட்ட நீர்தேக்க தொட்டிகளில் மேல் தளத்திற்கு ஏறி சென்று ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.<br>தற்போது உள்ள தொழில்நுட்பத்தின்படி மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் அளவுகளை (டிஜிடல் முறையில் ) கைபேசி வாயிலாக தொடர்ந்து கண்கானிக்கவும் அளவுகளை நிரந்திர பதிவு செய்திடவும் வழிவகை ஏற்படுத்தி தானியங்கி water level சாதனம் உ ருவாக்கப்பட்டுள்ளது. இது Solar மூலம் இயங்குவதால் மின்தடை காலங்களிலும் தடையின்றி இயங்கும். இதன் அளவுகளை ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களால் கண்கானிக்கவும் இயலும். இச்சாதனத்தை இந்நகராட்சியில் கீழ்காணும் நீர் தேக்க தொட்டிகளில் அவசியம் அமைக்க வேண்டியுள்ளது.<br>**1.** ஆலம்பாடி ரோடு மேல்நிலை நீர்தேக்க தொட்டி<br>- 8 LL<br>**2.** விளாமுத்தூர் சாலை மேல்நிலை நீர்தேக்க தொட்டி<br>- 5 LL<br>**3.** தீயணைப்பு நிலையம் அருகில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி<br>- 3 LL | தீர்மான எண்.<br>563<br>அனுமதிக்கப்பட்டது |

C:\council\nov2023 PDF FILE.doc

| | | |
|---|---|---|
| | **4.** அரணாரை மேல்நிலை நீர்தேக்க தொட்டி - 1.50 LL<br>**5.** புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி - 1.50 LL<br><br>இதனால் மேற்கான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் நீர் நிரம்பும் அளவுகள், இருப்பு அளவுகள், விநியோகத்தின் அளவுகளை துல்லியமாக கண்காணிக்கவும் , பதிவுகள் மேற்கொள்ளவும் **5** நீர்தேக்க தொட்டிகளில் தானியங்கி Water level சாதனங்களை பொருத்த உத்தேசமாக ரூ 4.50 இலட்சம் செலவினம் ஆகும். மேற்படி மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| **29.11.2023** | **பொருள் எண்: 20.** இந்நகராட்சியில் **2023 -2024** ஆம் ஆண்டிற்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், வரியினங்களுக்கான இரசீதுகள், பிறப்பு மற்றும் இறப்பு படிவங்கள், அம்மா உணவகம் மற்றும் துறை ரீதியாக வசூலிக்கப்படும் குத்தகை இனம் போன்றவைக்கு இரசீது சீட்டுகள் மற்றும் பிரிண்டர் டோனர்கள், A4 மற்றும் FS சைஸ் பேப்பர் மற்றும் எழுதுபொருட்கள் போன்றவைகள் தற்போது போதிய இருப்பு இல்லாத காரணத்தால் மேற்கண்ட பொருட்களை தமிழ்நாடு மல்டிபர்ப்பஸ் இண்டிகோ சர்வீஸ், திருச்சி வாங்கி உபயோகம் செய்து கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 564 அனுமதிக்கப்பட்டது |
| **29.11.2023** | **பொருள் எண்: 21.** துணை இயக்குநர் சுகாதாரபணிகள் பெரம்பலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3072/அ4/2019, நாள்.04.05.2023-ம் தேதிய கடிதத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்குட்ப்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு, சிக்கன்குனியா மற்றும் பிறகாய்ச்சல்களை பொதுமக்களிடையே பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில், கொசுப்புழு ஒழிப்புபணி, புகைமருந்து அடிக்கும்பணி மற்றும் கிருமிநாசினிகள் தெளிப்பதற்கும் வார்டுக்கு 2 களப்பணியாளர்கள் வீதம் 42 களப்பணியாளர்களை தற்காலிகமாக நியமித்து கொசுப்புழுக்களின் அடர்த்தி மற்றும் காய்ச்சல் ஆகியவற்றை தொடர் கண்காணிப்பு செய்து கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டதற்கிணங்க கடந்த 01.08.2023 முதல் மூன்று மாதங்களுக்கு அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து கொசுப்புழு ஒழிப்பு பணிகள் 42 DBC பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் இப்பணியானது வருகின்ற 31.10.2023 அன்றுவரை முடிவு பெற்றுள்ளது. தற்சமயம் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மற்றும் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அவர்களின் கடிதம் ந.க.எண்.434/அ4/2023, நாள்: 14.07.2023 ம் தேதிய அறிவுரைகளின்படி நகராட்சியை சுற்றியுள்ள அனைத்து கிராம ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளிலும், டெங்கு காய்ச்சல் பொதுமக்களிடையே அதிதீவிரமாக பரவிவரும் சூழ்நிலை உள்ளதால் இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி அறிவுரை வழங்கியுள்ளார்கள். எனவே டெங்கு காய்ச்சல் கொசுப்புழு தடுப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும், ஏற்கனவே DBC டெங்கு காய்ச்சல் கொசுப்புழு தடுப்பு பணிக்கு 42 DBC பணியாளர்களை வழங்கி வரும் ஒப்பந்ததாரர் திருமதி. எஸ். ஜெயந்தி என்ற நிறுவனத்தின் மூலம் மேலும் மூன்று மாதங்களுக்கு பணியாளர்களை வழங்குவதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலைவிகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணியாளர்களை வழங்கிட சம்மதக் கடிதத்தினை சமர்ப்பிக்கமாறு தெரிவித்து 15.11.2023–ல் ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது . | தீர்மான எண். 565 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி ஒப்பந்ததாரர் 42 களப்பணியாளர்களை 90 நாட்களுக்கு பழைய விலை விகிதம் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கு விருப்ப கடிதம் **20.11.2023** அன்று சமர்ப்பித்துள்ளார் எனவே,(42X90 = 3780 X 587 =2218860/-) தோராயமாக ரூ.2300000/- (ரூபாய் இருப்பத்தி முன்று இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் பணி நீட்டிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. டெங்கு, சிக்கன்குனியா மற்றும் தொற்றுநோய் பரவாமல் இருக்க தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வந்ததால் அன்னாருக்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்திற்கு நீட்டிப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண்.5177/2022/எச்1</u>** | |
| **29.11.2023** | **பொருள் எண்: 22.** பெரம்பலூர் நகராட்சி அக்டோபர் மாதம் **2023** ம் ஆண்டு பிறப்பு **161** இறப்பு **16** எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் பார்வையியிடடு பதிவு செய்யலாம்<br>**ந.க.எண். 680/2023/ எச்1** | தீர்மான எண். 566 அனுமதிக்கப்பட்டது |

**//ஒம்//திருமதி.மா.அம்பிகா**
**நகர்மன்றதலைவர்**
**பெரம்பலூர் நகராட்சி**

**// உண்மை நகல்//**

ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி